கிறிஸ்து பிறப்புப் பெருவிழாத் திருப்பலி

திருவழிபாடு ஆண்டு A

இன்றைய வாசகங்கள்:

எசாயா ஆகமத்திலிருந்து வாசகம் 52:7-10,

திருப்பாடல் 981-6,

திருத்தூதர் பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1:1-6,

புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1:1-8

திருப்பலி முன்னுரை:

நமக்காக ஒரு பாலன் பிறந்துள்ளார்

இறையேசுவில் இனிய சகோதரர்களே சகோதரிகளே, நண்பர்களே, இயேசு பிறப்பு விழாத் திருப்பலியில் பங்கேற்றுக்கொண்டிருக்கும் அன்பு மக்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்து பிறப்புவிழா நல் வாழ்த்துகள்.

திருமகனின் பிறப்பால் மீட்படைந்து புது வாழ்வு பெற்று நிறைவடைந்து மகிழ்வுற உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். பிறக்கும் இயேசு பாலன் உங்கள் உள்ளங்களில் பிறக்கவேண்டும். உங்கள் வாழ்வு மலர்ந்து சிறப்படைய வேண்டும். பிறந்து வந்து அவர் தந்த இந்த விடுதலை வாழ்வால் நாம் அனைவரும்: நீங்களும், நானும் இறைவனின் அருளால் நிறைந்து அன்புப் பணி செய்பவராய் உலகோர்முன் சிறப்படைந்து நன்மைகளை நிறைவாய் உடையவர்களாய் சிறப்புறுவோமாக. இந்த அருள் உண்மைகளை நம் மனத்தில் ஆழமாகப் பதித்தவர்களாக, கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழவும், நாம் அனைவரும் அமைதியின் தூதர்களாக வாழவும், பணிபுரியவும் வரம் கேட்டு தொடரும் திருப்பலியில் மன்றாடிச் செபிப்போம்.

நமக்கு ஒரு பாலன் பிறந்துள்ளார். வாரும் ஆராதிப்போம்!

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எங்கள் வாழ்வின் மீட்பராக இயேசு கிறிஸதுவைக் கொடுத்த எம் இறைவா!

கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் மகிழ்ச்சியில் எம் திருத்தந்தை, ஆயர்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் என்று உலகமக்கள் அனைவரின் உள்ளத்தில் உண்மையான மகிழ்ச்சியையும், அமைதியையும் நிறைவாய் நிலைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை வழங்கும் தந்தையே!

பல்வேறு காரணங்களால் இன்றைய இத் திருப்பலியில் பங்குகொள்ள முடியாதிருப்போர், நோயுற்றிருப்போர், வேதனைகளுக்குள் வாழ்வோர், சிறையிலிருப்போர், பணயக் கைதிகளாயிருப்போர் அனைவரும் நீர் கொடுக்கும் மகிழ்ச்சியைப் பெற்று மகிழ அருள் கூர்ந்தருள வேண்டுமென்று பிறந்திருக்கிற இயேசுபாலன் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள்: தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்: என்ற தந்தையே!

எம் இளைஞர்களை ஆன்மீகத்திலும், அருள்வாழ்விலும் உறுதிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விடுதலையும் வாழ்வுக் கொடுக்கும் இறங்கி வந்த எம் இறைவா!

இன்று எம் உலகில் உம் பிறப்பிற்காகவும், புதிய ஆண்டில் நல்வரவிற்காகவும் காத்திருக்கும் அனைத்து மாந்தருக்கும் பழமையைக் களைந்துப் புதிய சிந்தனைகள் நல்லெண்ணங்கள், ஒருவர், மற்றவருக்கு உதவக்கூடிய பிறன்புச் சிந்தனைகளைப் பொழிந்து நல்லுலகம் காணவும், உமது பிறப்பின் வழியாக ஏழை எளியவர்கள் வாழ்வு வளம் பெறத் தேவையான அருள் வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஒளியான எம் இறைவா!

இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்வில் உம்மை அறியாமல் வாழ்ந்தக் காலங்களில் தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப, இவ்வுலகச் சிற்றின்பங்களைப் பெரிதாகக் கருதி அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை இழந்த நிலையில் தங்களைத் தேற்றுவதற்கு யாரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நீர் உமது உடனிருப்பை நிறைவாகப் பொழிந்து உமது ஆவியின் அருளை நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மகிழ்ச்சியின் மன்னராம் இறைவா,

வாழ்வின் குறிக்கோளை அறிந்துகொள்ளாமல் இவ்வுலகின் செயற்கைச் சூழலில் சிக்கி, தவறான இலக்கை நோக்கிய பாதையில் பயணம் செய்து கொண்டிருப்போர் மனந்திரும்ப உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.